மலான் ஆட்சியைப் பின்பற்றப் பார்க்கிறது

ரொடீஷியா

இனவெறியும் நிறவெறியும் தலைகாட்டுகின்றன

சாலிஸ்பரி டர்பன் ஆகுமோ என அஞ்சுகின்றனர் வெள்ளையர்

Phone No 4502 | Regd. No. M. 5458

விலை அரை அணு | இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணாதுரை M.A. MALAIMANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (24—6—50) வெளியூர் (25—6—50) [இதழ் 287

இனவட்டாரம் அமைக்கும் திட்டம் சரிந்துபோகிறது

வெள்ளையரின் நிறவெறி, எல்லையில்லாது வளர்ந்து கொண்டே போகிறது. இந்த வெறி நோய் ரொடீஷியாவுக்கும் பரவி விட்டதாகத் தெரிகிறது. மலான் ஆட்சியைப் பின்பற்றி ரொடீஷியாவிலும் இனவட்டாரங்களை அமைக்க வெள்ளையர் திட்டமிடுகின்றனர். இருந்தபோதிலும் அங்கு இத்திட்டத்திற்கு எதிர்ப்பு பலமாக இருந்து வருவதாக வெள்ளையர் நினைக்கின்றனர். வெள்ளையரின் இத்தகைய நிறவெறி காரணமாகத் தென்னாப்பிரிக்காவில் கம்யூனிசம் புகுந்து வளர்ந்து வருவதை வாசகர்கள் அறிவர். இப்பொழுது ரொடீஷியாவில் வெள்ளையர் மையங்களும் இடங்களும் ... களும் சாலிஸ்பரியை டர்பனாக மாற்றிவிடும்போலிருக்கிறது. இனவெறியை நீடித்தால், ரொடீஷியாவிலும் கம்யூனிசம் இடம் பெறக்கூடும்.

சாலிஸ்பரி, ஜூன் 23—

ரொடீஷியாவில் வெள்ளையர் வசிக்கும் இடங்களிலும், இந்தியர் குடியேறுவது கண்டு இங்குள்ள வெள்ளையர்களுக்கு ஆத்திரம் ஏற்பட்டிருக்கிறது. ரொடீஷியாவின் தலைநகரான சாலிஸ்பரி, எங்கு மற்றொரு 'டர்பன்' நகராக ஆகிவிடுமோ என்ற பீதி வெள்ளையர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

மலான் சர்க்கார் செய்தது போல் இனமண்டலங்கள் ஏற்பட்டிருக்கிறது.

மலான் சர்க்கார் செய்தது போல் இனமண்டலங்கள் ஏற்படுத்தும் பொருட்டே வெள்ளையர் கூக்குரலிடுவதாக சிலர் கருதுகின்றனர்.

அவான்டேல் எல்லையில், கருப்பர்களுக்கு என்று தனி ஆஸ்பத்திரி ஏற்படுத்த ரொடீஷிய சர்க்கார் முயன்றதற்குப் பலத்த எதிர்ப்பு இருந்து வருகிறது.

இனமண்டல யோசனை விஷயமாக ரொடீஷிய மக்கள் அபிப்பிராயத்தை அறிவதால் மூலம் பெரும்பிரச்னை எழும் கலாம் என்று சாலிஸ்பரி மேயர் முடிவு செய்தார். ஆனால் ஐரோப்பிய, ஆப்பிரிக்க கருப்பர்கள் ஆஸ்பத்திரி கமிட்டி மேயர் இம்முயற்சியில் இறங்கக்கூடாது என்று ஹைகோர்ட் மூலம் இன்ஜங்ஷன் பெற்று தடுத்துவிட்டது.

அவான்டேல் தொகுதி மெம்பர் சென்றவாரம் ரொடீஷிய பார்லிமெண்டில் இந்தியர்கள் தாங்களாகவே பொறுக்கி எடுக்கும் தொகுதியில் தனித்து வாழச்செய்ய வேண்டும் என்கிற இன மண்டல யோசனையை வெளியிட்டார். ஆனால் இதற்கு ஆதரவில்லை. இந்த யோசனையை பலமாக ஆட்சேபித்ததால் இது கைவிடப்பட்டது. சாலிஸ்பரி முனிசிபல் பிரதேசத்திற்குள் நிலங்களை ... குடி... கார்களைத் தடுக்க இப்பொழுது சட்டத்தில் எவ்வித ஷரத்தும் இல்லை.

ஆனால் முனிசிபல் எல்லைக்கு வெளியிலுள்ள இடங்களில் இம்மாதிரி தடை செய்வதற்கான ஷரத்துகள் சட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இப்பிரச்னையை சுமுகமாகத் தீர்த்துவைக்க நகர கௌன்சில் நல்ல இடமாகப் பார்த்து கருப்பர்களுக்கு ஒதுக்குவது என்று உத்தேசித்திருக்கிறது.

கப்பலில் வெடிவிபத்து நேரிட்டதேன்?

போக்குவரத்து இலாகா விசாரணை செய்கிறது

லண்டன், ஜூன். 23—

செங்கடலில் சூயஸ், அரேபிய கரைக்கப்பால வெடித்த 'இந்தியன் எண்டர்பிரைஸ்' என்ற கப்பல், சதிவேலை காரணமாகவே விபத்திற்குள்ளாகியிருக்கவேண்டும் என்று சந்தேகிக்கப்படுகிறது. பாரசீக வளைகுடாவில், இரு பிரெஞ்சு விமானங்கள் நொறுங்கிய சம்பவத்துடன், இதுவும் சேர்த்துக் கவனிக்கவேண்டும் என்றும் சிலர் எண்ணுகிறார்கள். இவ் விபத்து விஷயமாக தீர விசாரணை நடத்தும் வேலையில் பிரிட்டிஷ் போக்குவரத்து மந்திரி இலாகா இறங்கிவிட்டது.

இதிலுள்ள சரக்குகள் நஷ்டத்திற்காக மட்டும் 7,0000 ஸ்டர்லிங் நஷ்டஈடு இன்ஷியூரன்ஸ் கம்பெனி கொடுக்க வேண்டியிருக்கும் என்று சொல்லப்படுகிறது. இக்கப்பல் விபத்தில் 10 லட்சம் ஸ்டர்லிங் வரை இன்ஷியூரன்ஸ் கம்பெனி கொடுக்கும்படியாக இருக்கும்.

இக்கப்பலில் 850 டன் சாமான்கள் இருந்தனவென்று தெரிகிறது. சென்னைக்கு வந்த சாமான்களில், பெரும்பாலானவை மருந்து சப்ளைகளும் டீசல் என்ஜின்களுமாகும். ஜூலை கடைசிவாரத்தில், இக்கப்பல் சென்னை துறைமுகத்திற்கு வருவதாக இருந்தது.

ரஷ்ய எல்லை அடைக்கப்பட்டது

ஆஸ்லோ, ஜூன் 23—

நார்வே பக்கமுள்ள தன் எல்லையை, ரஷ்யா அடைத்துவிட்டது. ரஷ்யா நேற்று கொண்டதின் பேரில், புது நடை உத்திரவுகளை நார்வே பார்லிமெண்ட் அங்கீகரித்திருக்கின்றது. இந்த எல்லைப் பிரதேசத்திற்கு அரை மைல் தூரத்திற்குள், காமிராக்கள் கூட தலைகாட்டக் கூடாது என்று, உத்திரவில் ஒரு ஷரத்து கூறுகிறது. இந்த எல்லைப்பாதுகாப்பைக் கண்காணிக்க விசேஷ யூனிட் ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

பல தலைமுறைகளாக இந்த எல்லையைக் கடந்து மீன்களைக் கொடுத்துவிட்டு அதற்குப் பதிலாக தோல், மாவு முதலியவைகளைப் பெற்று வந்த ஜனங்களுக்கு இது பெரும் தடையாக இருந்துவருகிறது.

அண்ணாத்துரைமீது அடக்குமுறை அம்பு

சீர்காழி கூட்டத்துக்கு 144-தடை

சீர்காழி, ஜூன். 23—

இன்றுமாலை இவ்வூர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நடைபெற இருந்த பொதுக்கூட்டத்திற்கும், அதில் கலந்துகொள்ள இருந்த கழகப்பொதுச்செயலாளர் சி. என். அண்ணாதுரை, கே. கே. நீலமேகம், பெத்தாம்பாளையம் பழனிச்சாமி ஈ. வெ. கி. சம்பத் ஆகியோர்க்கும், உள்ளூர் கழகத்தோழர்களான பாலகிருஷ்ணன், சண்முகம் ஆகியோர்க்கும் இன்று காலை 8 மணிக்கு 144 தடை உத்திரவு போலீஸ் அதிகாரியால் சார்வு செய்யப்பட்டது.

சீர்காழியில் திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக் கூட்டம் நடைப்பெற்றால், பொதுஜன அமைதிக்குப் பங்கம் ஏற்படும் என போலீஸ் சப் இன்ஸ்பெக்டர், ஸ்டேஷனரி சப் மாஜிஸ்ட்ரேட்டிடம் விண்ணப்பித்துக்கொண்டதற்கிணங்க 144 தடை உத்திரவு விதிக்கப்பட்டதாகத் தெரிகிறது. (ந-நி)

மத்தியகிழக்குக்கு ஆயுத உதவி

பாக்தாத், ஜூன் 23—

மத்திய கிழக்கு ஆயுத உதவி விஷயமாக, மூவல்லரசு செய்த முடிவு பற்றி அரபுகளுக்கு அக்கறை கிடையாது என்றும், ஏனெனில் அரபுகளுக்கு அம்முடிவில் இவ்விதப்பிரயோசனமுமில்லை என்று ஈராக் பிரதம மந்திரி கூறினார். ... கேட்கும் பட்சத்தில், பிரான்ஸ் ... துக்காரரென்றும், ஆகவே மூவரசு முடிவை அரபுகள் ஆதரிப்பதோ, எதிர்ப்பதோ விசியா ... பாதிக்காது என்று கூறினார்.

அரபு கூட்டுப் பாதுகாப்பு திட்டம் வெற்றிபெற ஜோர்டன்பிரச்னை தீர்க்கப்படவேண்டும் என்றும், ... ஜோர்டன் ...

கம்யூனிஸ்டு எதிர்ப்பு மசோதாவுக்கு திருத்தம் நிராகரிக்கப்பட்டது.

ஆஸி சட்டசபையில் காரசாரமான விவாதம்

சிட்னி, ஜூன் 23—

ஆஸ்திரேலியாவில், சட்டசபையில் நிறைவேறிய கம்யூனிஸ்டு எதிர்ப்பு மசோதா செனட்டில் விவாதிக்கப்பட்டபோது திருத்தம் கொண்டுவரப்பட்டதால், மீண்டும் இம்மசோதா சட்டசபைக்கு வந்தது. சட்டசபையில் இத்திருத்தம் விஷயமாக காரசாரமான விவாதம் நடந்தது. பிரதமர் மென்சிஸ் பேசுகையில், 'ஒன்று கம்யூனிஸ்டுகளை ஒடுக்கவேண்டும். அல்லது அவர்களிடம் சரணடைய வேண்டும் இதில் எதை விரும்புகிறீர்கள்'' என்று கேட்டார். ஒரு மெம்பர் திருத்தத்தை ஆதரித்துபேசுகையில், பிரதமர் 'குழப்பத்தில் இருக்கிறார்' என்றும் கூறினார். முடிவில் திருத்தம் நிராகரிக்கப்பட்டு, மீண்டும் செனட் அங்கீகாரம் பெற இம்மசோதா ...

அக்யாக் புதுப்பிக்கப்பட்டால்....

லண்டன், ஜூன் 23—

யுத்தத்தில் சேதமடைந்த அக்யாக் துறைமுகம், அதன் ... புதுப்பிக்கப்பட்டால், பர்மாவின் அரிசி ஏற்றுமதி மிகத் துரிதமாக நடைபெறும் எனத் தெரிகிறது. இப்பொழுது தற்காலிகமாக அரிசி போவது வெகுவாக குறைந்துவிட்டது. அக்யாக் துறைமுகத்தை திருத்தியமைப்பதற்கு, ... பெற்று நிர்மாண ஆரம்ப ... திற்கு ரூ. 700000 செலவா...

இஸ்ரேல் சம்பந்தப்பட்ட உடன்படிக்கைகள்

பாக்தாத், ஜூன் 23—

இஸ்ரேல் சர்க்கார் சம்பந்தப்பட்ட எல்லா சர்வதேச உடன்படிக்கைகளையும், ஒப்பந்தங்களையும் ஈராக் சர்க்கார் பகிஷ்கரிக்கும் எனத் தெரிகிறது. இவ்விஷயமாக எல்லா அரபு சர்க்கார்களும் ...

மாலை மணி

சென்னை 24—6—50 சனிக்கிழமை

தொழில் வளர்ச்சி

தொழில் வளர்ச்சி பற்றி நாட்டில் பேசாத நா இல்லை; எழுதாத ஏடு இல்லை!

நாட்டில் செல்வம் செழிக்கவும், வாழ்வில் வளங்கொழிக்கவும், தொழில்கள் பெருக வேண்டும், உற்பத்தி உயர வேண்டும் என்ற குரலை ஓசையை, அரசாட்சியில் ஏறியுள்ள அமைச்சரிலிருந்து அரசமரத்தடியில் ஒண்டியிருக்கும் ஆண்டி வரையிலே கூறிவருகிறார்கள்.

தொழில், மனித முயற்சியின் விளைவு. மனிதனின் அறிவு ஆற்றலும் தொழில்களை வளர்க்கின்றன — அவைகள் மக்களுக்கு வாழ்வின்பம் அளிக்கின்றன. ஆண்டவனை நம்பி நம்பி காலந்தள்ளிய போக, பந்தகோடிகளெல்லாம்கூட, இப்பொழுது, மனித முயற்சியினால் மட்டுமே ஏற்படக்கூடியனவாக இருக்கின்ற தொழில்களின் வளர்ச்சி பற்றிப் பேசவரத் தொடங்கி விட்டார்கள்.

"பெற்றெடுத்த ஆண்டவன் படி அளப்பான்;" "அவனன்றி ஓரணுவும் அசையாது" என்பனவெல்லாம் வைதிகர்களுக்குக் கூடப் பழங்கதையாகிவிட்டன. ஆண்டவன் அருள், உள்ளத்தில் பக்தி ரஸத்துடன் போற்றி புகழ்ந்துகொள்வதற்கு மட்டுந்தான் பயன்படுமேயல்லாமல், செல்வச் செழிப்புக்குப் பயன்படப் போவதில்லை — பயன்படாது என்ற கருத்தினை கொள்ள ஆரம்பித்துவிட்டார்கள். ஆண்டவனின் அருளில் மதிப்புடையோர்கூட தொழில் வளர்ச்சியுற வேண்டும், அதற்கு மனித முயற்சி வேண்டும் என்று கூறி வருகிறார்கள்.

இப்படியாகப் பல்வேறு வகைப்பட்ட திறத்தினரும், தொழில் வளர்ச்சியில் அக்கறை காட்டி வருகின்றனர். ஆனால், தொழில் வளர்ச்சி பற்றிக்கொண்டுள்ள நோக்கமும், முறைகளும் ஒவ்வொருவருக்கும் வேறுபடுகின்றன.

முதலாளிகள் தங்களுக்கு லாபம் தரும் சாதனமாக இருந்து தொழில்கள் வளர வேண்டும் என்று எண்ணுகின்றனர். முற்போக்கு கொள்கையினர், மக்களுக்கு வாழ்வின்பம் அளிக்கும் வகையில் தொழில்கள் வளர்ச்சியுற வேண்டுமென்று பாடுபடுகின்றனர். ஆனால், நாடாளும் காங்கிரஸ் கட்சியினரோ, தொழில் வளர்ச்சி தங்கள் கொள்கையை நிறைவேற்றுவதாக இருக்கவேண்டும் என்று கருதுகின்றனர்.

தொழில்வளர்ச்சி விஞ்ஞான வளர்ச்சியைப் பொறுத்திருக்கிறது. விஞ்ஞான வளர்ச்சியையும், அதன் முறைகளையும் வெறுப்பவர்கள் தொழில்வளர்ச்சியை விரும்புபவர்களாக இருக்க முடியாது. [illegible] விஞ்ஞானத்தையும் வெறுத்துத், தொழிலையும் வளர்க்க வேண்டும் என்று எண்ணுகிற விசித்திர மனிதர்கள் இந்த நாட்டில் இருக்கிறார்கள். அவர்கள் தாம் கதர்க்காங்கிரஸ்காரர்கள்!

இயந்திரத் தொழிலை வெறுத்துக் குடிசைத் தொழிலைப் போற்றி, அதே நிலையில் தொழில்கள் வளர வேண்டும், உற்பத்திப் பெருக வேண்டும் என்று கூறிக்கொண்டிருக்கிறார்கள் காங்கிரஸ்காரர்கள். ஒரு காலத்தில் குடிசைத் தொழில்களாக இருந்த பல தொழில்கள்தாம், இப்பொழுது விஞ்ஞானத்தின் உதவி கொண்டு, விரிவடைந்து, பெரும் பெரும் தொழில்களாகக் காட்சியளிக்கின்றன. மனிதன் தன்னுடைய உழைப்பைக் குறைத்துக்கொள்ளவும், பயனைப் பெருக்கிக்கொள்ளவும், இன்பத்தை அதிகமாக்கிக் கொள்ளவும், விஞ்ஞானத்தின் உதவியால் இவ்வளவு தூரம் வளர்ச்சியடைந்து வந்ததற்குப் பிறகு, காட்டுமிராண்டி நிலைக்கு மீண்டும் பின்னோக்கிப் போகும் கொள்கையைக் காங்கிரஸ்காரர்கள் வைத்துக் கொண்டிருப்பது, எவ்வளவு கேலிக்குரிய செய்கையாகும்!

இயந்திரம் கைப்பற்றுமுன்பல குடிசைத் தொழில்கள் இன்னும் இருக்கின்றன. அந்தத் தொழில்களை வளர்ப்பதை யாரும் குறைகூற முடியாது. ஆனால், இயந்திரத் தொழிலாக ஆக்கி, உற்பத்தி பெருமளவுக்கு வளர்ந்தான பிறகு, அத்தகைய தொழிலை குடிசைத் தொழிலாக மாற்றியமைக்கக் காங்கிரஸ்காரர்கள் பாடுபடுகிறார்களே, இதைவிட பிற்போக்கான கொள்கை வேறு என்ன இருக்க முடியும்? மில்துணி வந்ததற்குப்பிறகு, கதர்த்துணியைத்தான் உற்பத்தியாக்க வேண்டும் என்று கூறுகிறார்கள் என்றால், எவ்வளவு மடத்தனம் அதில் நிரம்பி இருக்க வேண்டும்?

காங்கிரஸ்காரர்கள் சொன்னபடி, குடிசைத் தொழிலை வளர்க்க முடிகிறதோ என்றால் அதுவும் முடியவில்லை. விஞ்ஞானக் காலப் போக்கு அதற்கு இடங்கொடுப்பதில்லை. விஞ்ஞானத்தை எதிர்த்துக் குடிசைத் தொழில்களுக்காகக் காங்கிரஸாரும், காங்கிரஸ் அரசாங்கமும் செலவழித்துள்ள நேரம், நினைப்பு, உழைப்பு, பொருள், அறிவு, ஆற்றல் எல்லாம் விழலுக்கிறைத்த நீராக பாழ்பட்டுப் போனதல்லாமல், உருப்படியான நிலைமைக்குப் பயன்படவில்லை. அழியும் குடிசைத் தொழில்களைச் [illegible] எல்லாமும் அழிவைவாகவே இருக்கின்றன.

இன்றைய நிலையில் அதே [illegible] உலகமுழுவதும் [illegible] வரும் பாடம். [illegible] விஞ்ஞானத்தையும் அதன் சாதனங்களையும் நம்பி வாழுகிறதோ, அந்த நாடுதான் தொழில்களை வளர்க்க முடியும். உற்பத்தியைப் பெருக்க முடியும் என்பதாகும். காங்கிரஸ் அரசாங்கமோ ஒப்புக்காக குடிசைத் தொழிலை நம்பி வாழுவதாக காட்டிக் கொள்கிறதேயல்லாமல், உண்மையில் இயந்திரத் தொழிலை நம்பிதான் வாழுகிறது — முழுக்க முழுக்க அப்படியேதான் வாழுகிறது! இந்த நிலையில், தோழர் காமராஜர் திருநெல்வேலி கூட்டமொன்றில் பேசுகையில் "குடிசைத் தொழில்களைப் புறக்கணிக்கக் கூடாது" என்று உபதேசம் புரிந்துள்ளார். அவர் உபதேசம் பல சமயங்களிலும் சிரிப்பை விளைவிப்பதாக இருப்பது போலவே, இப்பொழுதும் சிரிப்பைத் தருகிறது. தொழில் வளர்ச்சிபெறவேண்டிய அவசியத்தை அதே கூட்டத்தில் பேசிவிட்டு, அதே மூச்சில் குடிசைத் தொழிலைப் புறக்கணிக்கக்கூடாது என்றால், எவரும் எக்காளி கொட்டி நகைக்கத்தானே செய்வர்!

தொழில் வளர வேண்டுமானால், விஞ்ஞானம் வளர வேண்டும் — இவற்றின் முழுப்பொறுப்பையும் தனிப்பட்டவர்களிடம் விடாமல், அரசாங்கமே ஏற்று நடத்தினால்தான், தொழில்கள் வளர முடியும்; நாட்டில் செல்வம் செழிக்க முடியும் — வளங்கொழிக்க முடியும்!

ஜாவாவில் பூமி நடுக்கம்

19 பேர் கொல்லப்பட்டனர்

டிஜாகர்த்தா, ஜூன் 20— மத்திய ஜாவாவிலுள்ள [illegible] டச் பிரதேசத்தில் இன்று பூமி நடுக்கம் ஏற்பட்டதாக, டச் செய்தி ஸ்தாபனம் அறிவித்தது.

12 40 மணிக்கு ஏற்பட்ட இந்த பூமி நடுக்கத்தில் 17 பேர்கள் கொல்லப்பட்டனர். நூற்றுக் கணக்கானவர்கள் காயமடைந்தனர். சில பகுதியில் ஒரு நிமிஷம் வரையில் பூமி நடுக்கம் நீடித்திருந்ததென்றும், கடந்த 50 வருஷத்தில் இம்மாதிரி பூமி நடுக்கம் ஏற்பட்டதில்லையென்றும் அறிவிக்கப்படுகிறது.

3400 மைல்கள் தூரத்திலுள்ள போர்னியோவில், கடுமையான வேகமுள்ள ஓர் பூமி அதிர்ச்சி ஏற்பட்டதாக, [illegible] மானி நிலையத்தில் [illegible] பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

பெண்களுக்குப் பிரம்படி

ரங்கூன், ஜூன் 23— மத்திய பர்மாவிலுள்ள கம்யூனிஸ்டு [illegible] என்று கூறப்படுகிறது. இதைப் பெண்கள் யாரும் அணியக்கூடாது என்று அவர்கள் உத்தரவு பிறப்பித்திருக்கின்றனர்.

மாண்டலேயில் நடைபெற்ற கம்யூனிஸ்டு கூட்டத்தில் [illegible] பிடிக்கப்பட்டது. அவர்களுக்கு எல்லாருக்கும் முன்பு [illegible] கொடுக்கப்பட்டது. [illegible] செய்யப்பட்டிருக்கிறது.

உரையாடல்

மக்கள் மன்றம்

தூப்ரிவாள்

உரையாடுவோர்:—சுப்பு சாஸ்திரி, ரங்கசாமி அய்யங்கார்
இடம்:—மயிலாப்பூர், கபாலீஸ்வரர் சந்நிதி
காலம்:—மாலை

சுப்: ஓ! வாணும்...வரணும். ஏது அய்யங்கார்வாள் ரொம்ப தூரம் வந்துட்டது. சுவாமி தரிசனத்துக்கோ?

ரங்: நோ...நோ... அப்படி ஒண்ணுமில்லேங்காணும் சபாவுக்கு வந்தேன்.

சுப்: ஓஹோ! என்ன விசேஷமோ?

ரங்: விசேஷம் ஒண்ணுமில்லேங்காணும். நம்ம பட்டரை மியூசிக்கிளாசில் சேர்க்கணும், அதுக்காக செகரட்டரியைப் பார்க்க வந்தேன்.

சுப்: அதிருக்கட்டும்! [illegible] சமாசாரம் என்ன சார் ஆச்சு? காலேஜ்லே அட்மிட் பண்ணிட்டியளா?

ரங்: ஓ! அதெல்லாம்ஆயிட்டுது சார்!

சுப்: பேஷ்! நீர் ரொம்ப கெட்டிக்காரருங்காணும்; உம்மைப்போல ஆட்கள் இருந்தா, அந்த கம்யூனல் ஜி ஓ நம்பவாளே ஒண்ணும் செய்ய முடியாதுங்காணும்.

ரங்: அட, நீர் என்னங்காணும் சுத்தப் பைத்தியக்காரராய் இருக்கிறீர். கம்யூனல் ஜீ ஓவாவது மண்ணாங்கட்டியாவது. அதெல்லாம் ஏட்டோடு சரிங்காணும். நடைமுறையிலே நம்மவா வச்சதுதான் சட்டம்.

சுப்: அது சரிங்காணும், சட்டத்திலே இருக்கே சார்.

ரங்: இருக்கட்டுமே. அதைக் கண்டு நாம ஏங்காணும் பயப்படணும்? சட்டப்படி நாம்மவா இப்ப அகப்பட்டுண்டுவிழிக்கிறதே அல்லாம களுக், சாஸ்திரிகளும் இருக்கச்சே நமக்கேன் கவலை. முன்பெல்லாம் கம்யூனல் ஜீ. ஓ. வைப் பற்றி நம்மபப்பென்னவா எங்காத்து மூலை முடுக்கிலே— திண்ணையிலே — தெருவிலே பேசிண்டிருந்தோம். இப்போ பார்த்தியளா, விஷயம் எவ்வளவு தூரம் முத்திப்போச்சு!

சு: ஏன்?

ரங்: கோர்ட்டுக்கு வந்துட்டுதுங்காணும்! உமக்குத் தெரியாதா!

ஓ! அந்த மெடிகல்காலேஜ் அட்மிஷன் விஷயத்தைச் சொல்றியளா! அதென்னுச் சுங்காணும்.

ரங்: ஆறது என்ன! இஞ்ஜினியரிங் ஆர்டர் வாங்கியிருக்கே. அல்லாடிவாளாரோ இன்னுமென்ன வேணும்?

சுப்: நீர் சொல்றதைப் பார்த்தா கேஸ் ஜெயிச்சுடும் போலிருக்கே!

ரங்: அதிலே சந்தேகம் வேறு அல்லாடி பேசறார்ன்னுகேக்கணுமோ? அட்வேகேட் ஜனரலே விழிக்கிருங்காணும்...விழிக்கிறார்!

சுப்: பேஷ்! அப்படிக்காங்காணும் செய்யணும் இனிமே, சட்டத்துக்குள்ளே எங்காச்சும் ஓட்டை இருக்கான்னு பார்த்து, அந்த சட்டத்தையே உடைக்கணும். அப்போதுதான் இந்த கம்யூனல் ஜி. ஓ. அது, இது எல்லாம் ஒழியும்.

ரங்: அது தெரிஞ்சுதான் இந்த மாதிரி வழியைக்கண்டு பிடிச்சிருக்கா.

சுப்: ஆமாம்... ஆமாம் [illegible] ஏதாச்சும் செய்துதான் ஆகணும். இல்லாட்டா வரவர நம்மவாபாடு ரொம்ப மோசமாகன்னு போறது.

ரங்: அட அதிருக்கட்டுங்காணும். இதனாலே சூத்திரயாளெல்லாம பி. ஏ., எம். ஏ. இன்னு டிகிரி ஹோல்டரான்னு ஆயிண்டுவாருங்கோ இதைவிடமுண்டே யிருந்தா, அப்புறம் நமக்கென்ன கவுரவம் இருக்குங்காணும். அதைச் சொல்லும்!

சுப்: ஆமாங்காணும் நீர் சொல்றதும்சரிதான். அவாளே இனிமே சும்மாவிடக்கூடாது.

ரங்: அதுமட்டுமில்லேங்காணும், நம்ம சுயராஜ்யத்திலே இனிமே நம்மவளைத் தவிர வேறு யாருமே சரி தலைதூக்கவிடப்படாது.

சுப்: சபாஷ்! நீர்பெரியஆளுங்காணும். சரி, நான்வரட்டுமா, சுவாமி தரிசனம் பண்ணப் போறேன்.

ரங்: சரி, அப்படியே கொஞ்சம் பொடி கொடுத்துட்டுப் போங்காணும்.

(பொடியை வாங்கிப்போட்டுககொண்டு போகிறார்)

பழங்குடி மக்களுக்கும் பிரதிநிதித்வம் வேண்டும்

ஆஸ்திரேலிய பார்லிமெண்டில் கோரிக்கை

கான்பெரா, ஜூன். 23— ஆஸ்திரேலியா பார்லிமென்டின் எதிர்கட்சியினர் தொழிற்கட்சி ஆஸ்திரேலிய பார்லிமென்டில், ஆதிவாசிகளின் பிரதிநிதிக்கு இடமளிக்க வேண்டும் என்று கோரியிருக்கின்றனர்.

இருசபைகளின் ஒன்று அரசியல் [illegible] தக்கபடி திருத்த [illegible] ஆலோசனைகூறப்பட [illegible] என்று இச்சபை [illegible] கேட்டுக்கொண்டிருக்கின் [illegible]